**கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

-----------------------------------------------------

1 நிதிக்கூற்றுக்கள்

--------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

----------------------------------------

2015 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 08 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 29 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பராயம்

--------------------------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 261,000 தொகையான கணணி மற்றும் குரல் பதிவுக் கருவி மீண்டுவரும் செலவாக கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டில் மின் குமிழ்கள் மற்றும் திருத்தங்களுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 208,416 தொகை மூலதன செலவாக கணக்கிடப்பட்டுள்ளது.

1.3.2 பெற வேண்டியவை

------------------------

அறவிடப்பட வேண்டிய ரூபா 160,500 தொகையான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் ஏழு வருடங்களுக்கு மேலாக நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காட்டப்பட்டு வருகின்றது.

1.3.3 கணக்காய்வுச் சான்றுகள் இன்மை

-------------------------------------------

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி (ரூபா) | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணி கட்டிடம் | 35,936,292 | காணி உரிமைப் பத்திரம் |
| பொறித் தொகுதியும், இயந்திங்களும் | 441,876 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| தளபாடங்களும், பொருத்துக்களும் | 1,510,042 | |

1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள் மற்றும் விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| | அத்தியாயம் I இன் விதி 5(12) | பணம், களஞ்சியப்பொருட்கள் என்பன மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் இல. 571 | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 3,319,025 தொகையான காலங்கடந்த வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி, 2015 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 3,075,174 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 2,327,190 ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 747,984 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமானவிடயம் | 2015 ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்ட வருமானம் | 2015 இல் உள்ளபடியான வருமானம் | 2015 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| தண்டப்பணம் | 2,341,234 | 3,550,997 | 1,792,154 |
| வாடகை | 445,500 | 624,500 | 412,000 |

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஓட்டமாவடியில் 31 மீன் சந்தைக் கடைகள் நிர்மாணிக்கப்பட்டு 2015 பெப்ரவரி 25 ஆம் திகதி சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், 2016 மே 31 ஆம் திகதி வரை வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் 15 ஊழியர்கள் தொடர்பாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணத்தை உரிய திகதிகளில் செலுத்ததவறியதன் காரணமாக அந்நிதியத்திற்கு ரூபா 16,218 தொகையான மேலதிக கட்டணத்தை மீளாய்வாண்டில் சபை செலுத்த வேண்டியிருந்தது.

(இ) வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை பெறவேண்டிய வீதவரி ரூபா 11,937,904 நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இடமாற்றம் பெற்றுச் சென்ற, பதவியை வறிதாக்கிய மற்றும் இளைப்பாறிய பத்து ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடனில் அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 90,791 தொகை 1998 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்பட்ட போதிலும் அவற்றை அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அல்லது ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்
-------------------------------------------------
பாதீட்டுக் கட்டுப்பாடு
--------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 25% தொடக்கம் 144% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

5 முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்
---------------------------------------------------

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான முகாமைத்துவம்
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு